பக்கங்கள் 19+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 24 திங்கட்கிழமை 10.11.2025 | அதிர்வு 104

## அம்பாறை இரட்டைக்கொலை: அறுவருக்கு மரணதண்டனை!



அம்பாறை மேல் நீதிமன்றம் இன்று அறுவருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இந்த மரண தண்டனை, 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## ஊடக சந்திப்பைப் புறக்கணித்த செல்வம் எம்.பி.



(கி.வசந்தன்)

வவுனியாவில் இடம்பெற்ற ரெலோ கட்சியின் ஊடக சந்திப்பை அக்கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் புறக்கணித்து வெளியேறி இருந்தார்.

செல்வம் அடைக்கலநாதன் தொடர்பாக சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தளங்களில் வெளிவந்த குரல் பதிவு தொடர்பிலும், கட்சியின் செயற்பாடுகள் தொடர்பிலும் கட்சியின் தலைமைக் குழு வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக் 02



# அனுராதபுரத்தில் கோர விபத்து! உயர்தர மாணவன் உயிரிழப்பு!!

## பலரின் நிலைமை கவலைக்கிடம்

அனுராதபுரம், தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலாவ - ஜயகங்க சந்தி பகுதியில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் 46 பேர் காயமடைந்துள்ளனர். 03

## கல்வி வெளியீட்டுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ் இன்று சடலமாக மீட்பு!

### அந்தோனியார் ஆலய வளாகத்தில் இருந்து

(மன்னார் நிருபர்)

மன்னார் – யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சிப்பியாறு – பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலய வளா கத்தில் இருந்து இன்று திங்கட்கிழமை காலை சடலம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் வடக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பா ளராகவும், இலங்கை கல்வி வெளி 02









# அனலைதீவுக் கடற்பரப்பில் கைதான 14 இந்திய மீனவர்களுக்கும் மறியல்!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்ட 14 மீனவர்கள் அனலைதீவை அண்டிய கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை நேற்று இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இன்று காலை காங்கேசன் துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டனர்.

14 இந்திய மீனவர்களையும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறுஉத்தரவிடப்பட்டுள்ளது.

# நெடுந்தீவில் கைதான இந்திய மீனவர்கள் மூவருக்கு ஆறு மாத சிறைத்தண்டனை!

## 26 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 29 பேரில் 26 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும், மூவருக்கு 6 மாத கட்டாய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.



கடந்த செப்டெம்பர் 28 மற்றும் ஒக்டோபர் 9 ஆம் திகதிகளில் இரண்டு படகுகளுடன் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களின் வழக்கு இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்றது. இதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மீனவர்கள் மன்றுக்கு அழைத்துவரப்பட்டனர்.

வழக்கை ஆராய்ந்த நீதிவான் நளினி சுபாஸ்கரன், 26 மீனவர்களுக்கு 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட 2 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இதேநேரம், இரண்டு படகுகளின் ஓட்டிகளுக்கும் ஒரு படகு உரிமையாளருக்கும் 6 மாத கட்டாய சிறைத்தண்டனையும், ஒவ்வொருவருக்கும் தலா 4 மில்லியன் ரூபா அபராதத் தொகையும் செலுத்துமாறும், அதனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 3 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் நீதிவான் தீர்ப்பளித்தார்.

### கல்வி வெளியீட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யீட்டுப் பிரிவின் பணிப்பாளராகவும் கடமையாற்றிய திருஞானம் ஜோன் குயின்ரஸ் (வயது 60) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் இன்று காலை தனது வாகனத்தில் பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலயத்துக்கு வருகை தந்து வழிபாட்டில் ஈடுபட்ட நிலையில் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரியவருகின்றது.

சடலத்தைக் கண்ட ஆலய நிர்வாகத்தினர் இலுப்பைக்கடவை பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய நிலையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.பிரபானந்தன் சடலத்தைப் பார்வையிட்டார்.

பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காகச் சடலத்தை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

### ஊடக சந்திப்பைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை காலை முதல் மாலை வரை கூடி ஆராய்ந்து இருந்தது. இதன் பின்னர் ஊடக சந்திப்பும் இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பை ரெலோ கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி நடத்தியிருந்தார். ஊடக சந்திப்புக்கு முன்னதாகவே அங்கு பிரசன்னமாகியிருந்த ஊடகவியலாளர்கள், ரெலோ கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனையும் ஊடக சந்திப்பில் கலந்து கொள்ளுமாறும் பல தடவைகள் கேட்டனர்.

ஆயினும், அதற்கு மறுப்புத் தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அங்கிருந்து உடனடியாக வெளியேறிச் சென்றிருந்தார். ஊடக சந்திப்பில் தனக்கு அருகாமையில் அமர கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் சிலரை ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி அழைத்த போதும் வேறு எவரும் அதில் கலந்துகொள்ளாது வெளியேறிச் சென்றிருந்தனர்.

இதேவேளை, இந்த ஊடக சந்திப்பில் செல்வம் அடைக்கலநாதனுக்கு எதிராகவும், கட்சிக்கு எதிராகவும் திட்டமிட்டு ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ந.ரவிராஜின் 19ஆவது நினைவு

(த.சுபேசன்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் 19 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று (10) திங்கட்கிழமை காலை சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக அமைந்துள்ள அவருடைய நினைவுத் தூபி முன்றலில் இடம்பெற்றிருந்தது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் ரவிராஜின் மருமகன் சேனாதிராஜா கலையமுதன், சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் ஜெ.கிசோர், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கோகிலன், சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் மயூரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தென்மராட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கடந்த 2006 நவம்பர் 10 ஆம் திகதி கொழும்பில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.












## அனுராதபுரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தவர்களில் 36 பேர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. மேலும் 10 பேர் தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தலாவயில் இருந்து பயணித்த பயணிகள் போக்குவரத்து பஸ்ஸே வீதியை விட்டு விலகி, பள்ளத்தில் வீழ்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் உட்பட சுமார் 60 பேர் வரை பஸ்ஸில் பயணித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2015 ஆம் ஆண்டு பதியத்தலாவைப் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 6 பேரும், 2015 ஆம் ஆண்டில் இரண்டு நபர்களைத் தாக்கி, பின்னர் அவர்களை வாகனம் ஒன்றினால் மோதி படுகொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த அம்பாறை மேல் நீதிமன்றம், மேற்படி 6 நபர்களும் கொலைக் குற்றவாளிகள் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளனர் என்று கூறி இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

# மலையகத்தில் அரசியல், கல்வி உரிமைகளின் இழப்பு மாகாண சபைத் தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும்!

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ். சதாசிவம் கூறுகிறார்

(மஸ்கெலியா நிருபர்)

மலையக சமுகம் பெற்றிருந்த அரசியல் மற்றும் கல்வி உரிமைகளை படிப் படியாக இழந்து வருகிறது. இந்த இழப்பு மத்திய மாகாண சபைத் தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, நாம் மிகவும் விழிப்புடன் ஒற்றுமையாக இருந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், மத்திய மாகாண முன்னாள் கல்வியமைச்சரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எஸ். சதாசிவம் தெரிவித்தார்.

“மலையக அரசியல், சமூக நிலைமை” தொடர்பான கலந்துரையாடல் நேற்று (09) ஹட்டன் தொழிலாளர் பொழில் நிலையத்தில் இடம்பெற்றபோது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொழிலாளர் பொழில் நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் எம். நேசமணி, ஹட்டன் நகர சபை முன்னாள் உறுப்பினர் எம். பிர்ஷ்ணவ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த கலந்துரியாடலில் கல்வித்துறை, தொழில் சங்கம், வர்த்தகம், சுயதொழில், சமூக செயற்பாடு போன்ற பல துறைகளைச் சார்ந்த சுமார் 30 பேர் கலந்து கொண்டார்கள்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

குடிசன மதிப்பீட்டில் இந்திய வம்சாவளி



மக்களின் எண்ணிக்கை பெருமளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. எமது சனத் தொகையை வைத்துதான் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் இந்திய வம்சாவளி மலையக மக்களின் வாக்குரியைப் பெற்றுக் கொடுத்தார். அதன் காரணமாகவே, நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் எமது பிரதிநிதித்துவம் அதிகரித்து வந்துள்ளது.

அதேபோல், மலையகத்தில் கல்வி வளர்ச்சிக்கும் மத்திய, ஊவா, சாப்பிரகமுவ மற்றும் மேல் மாகாணங்களுக்கு மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட இந்திய வம்சாவளி தமிழர்களில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனத்தையும் பெற்றுக் கொடுத்திருந்தார். ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறி வருவதோடு, எதிர்கால அரசியல், கல்வி உரிமைகள் கேள்விக் குறியாகும் அச்சமும் உருவாகியுள்ளது.

எமக்கிருந்த மாகாண மேலதிகக் கல்வி பணிப்பாளர்கள் நியமனம் பறி போயுள்ளது. வலயக் கல்வி அலுவலகங்களில் மலையக இந்திய வம்சாவளி தமிழ்க் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் பெறப்பட்ட ஹட்டன் வலயக் கல்வி அலுவலகத்தில் இந்திய வம்சாவளி பணிப்பாளர் இல்லை. காரணம், தகுதியானவர்கள் எம் மத்தியில் இல்லை என்று கூறப்படுகின்றது.

அதேபோல், அரசியல் ரீதியில் எமக்குக் கிடைத்த பிரதிநிதித்துவமும் குறைந்துள்ளது. நாடாளுமன்றத்தில் மத்திய, ஊவா, சப்பிரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் ஒரு நேரத்தில் இந்திய வம்சாவளி தமிழர்களில் 10 பேர் உறுப்பினர்களாக இருந்த நிலையில் இன்று 4 பேர் மட்டுமே இருக்கின்றார்கள்.

உள்ளூராட்சி மன்றங்களில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 7 பேர் கடந்த காலங்களில் தலைவர்களாக இருந்தார்கள். ஆனால், இன்று அட்டன் டிக்கோயா, தலவாக்கலை-லிந்துல நகர சபைகள் இழக்கப்பட்டுள்ளன.

ஹட்டன் நகர சபையில் 10 உறுப்பினர்கள் இருந்த இடத்தில் இன்று ஆறு உறுப்பினர்களே இருப்பதாகக் கூறப்படுகின்றது. இது எதிர்காலத்தில் மாகாண சபைத் தேர்தலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, நாம் விழிப்புடனும் ஒற்றுமையுடனும் இருந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.- என்றார்.



# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவி ஒருவர் திடீரென உயிரிழப்பு!

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் உயிரியல் பரீட்சைக்குத் தோற்றவிருந்த 19 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் திடீரென உயிரிழந்த சம்பவம் தம்புள்ளையில் இடம்பெற்றுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை தனது அறையில் படித்துக்கொண்டிருந்த மாணவி, காலை தூக்கத்திலிருந்து எழுந்திருக்காததை அவதானித்த பெற்றோர், மயக்க நிலையில் இருந்த மாணவியை தம்புள்ளை ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு மாணவியைப் பரிசோதித்த வைத்தியர்கள், மாணவி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று பெற்றோரிடம் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து, மாணவியின் மரணம் தொடர்பாக கண்டறிவதற்கு, மாணவியின் வீட்டுக்குப் பொலிஸார் சென்றனர்.

எனினும், மாணவியின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# காற்றின் தரம் மோசம்

இலங்கை முழுவதும் பல பகுதிகளிலும் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலைமை அளவுக்கு மோசமடைந்துள்ளது. காற்றுத் தரக் குறியீடு தொடர்பான தகவல்கள் இதனை வெளிப்படுத்தியிருக்கின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் யாழ்ப்பாணம், கொழும்பு, வன்னி ஆகியவையும் அடங்குகின்றன என்பது தரவுகள் மூலம் வெளிப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் காற்று மாசுபாடு அளவு நீண்ட காலமாக மோசமான நிலையில் நீடிப்பது சுகாதார அபாயங்களை ஏற்படுத்தக் கூடிய ஒரு நிலையை எட்டி விட்டது என்பதை காற்றுத் தரக் குறியீட்டு அளவீடுகளின் பகுப்பாய்வுகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக, குழந்தைகள், முதியவர்கள் மற்றும் சுவாச அல்லது இதய நோய் உள்ளவர்கள் இந்தக் காற்று மாசுபாட்டினால் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தகையோர் வெளிப்புற உடற்பயிற்சிகளைக் குறைத்தல், வெளிப்புற காற்று மற்றும் அழுக்குகள் வீடுகளுக்குள் நுழைவதைத் தடுக்க ஜன்னல்களை மூடி வைத்தல் போன்ற நடவடிக்கைகளை எடுத்தல், பாதுகாப்பு முக கவசங்களைத் தொடர்ந்து அணிந்திருத்தல் போன்ற பல வழிகாட்டுதல்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் வழங்கப்பட்டுள்ளன.

நீண்டகாலம் மனிதர்கள் தொடர்ந்து சுவாசிக்க கூடிய காற்றின் தரம் தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட தர நிலையிலும் விட 3.6 மடங்கு மோசமான கட்டத்தில் இலங்கையின் சுற்றாடல் காற்றின் தரம் உள்ளது என்பது 2024 இல் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலைமை நீடிப்பது உடல் ஆரோக்கியத்துக்குப் பொருத்தமற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் உட்பட முக்கிய நகரங்களில் காற்றின் தரத்தை அளவீடு செய்வதற்கான திட்ட ஒழுங்குகளுக்கு 2022 இலேயே உலக சுகாதார ஸ்தாபனம் உதவி வழங்கியிருந்தது. அதன் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தரவுகளே இத்தகைய அதிர்ச்சி தரும் பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றன.

சுற்றுச்சூழல் அமைச்சின் தகவல்களின்படி வீதிகளில் பாவனையில் இருக்கும் மோசமான வாகனங்களே இலங்கையில் காற்றின் தரம் மாசுபடுவதற்கு 55 முதல் 60 வீதம் காரணம் எனக் கூறப்படுகின்றது தொழிற்சாலை கழிவுகள் 20 முதல் 25 வீதமும், ஏனைய உள்ளூர் நடவடிக்கைகள் 20 வீதமும் காரணம் என்று பொதுவான கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

வீதியில் ஓடும் வாகனங்களின் புகை வெளியேற்றம் தொடர்பாக கட்டுப்பாடுகள், விதிமுறைகள் இருந்தாலும் - வருடாந்த வரி உரிமை நீடிப்புக்கு முன்னர் அத்தகைய புகைப் பரிசோதனை சான்றிதழ் பெறுவது கட்டாயமாக்கப்பட்டிருக்கின்ற போதிலும் - அந்த விதிமுறை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச் சாட்டு உள்ளது.

புதுடில்லி போன்ற இந்திய நகரங்களில் காற்றின் தரம் மிக மிக மோசமான கட்டத்தை எட்டி விட்டதாக தொடர்ந்து செய்திகள் வெளியாகின்றன. அது, அந்த நாட்டின் தலைநகரத்து மக்களிடையே பெரும் நெருக்கடியைத் தரும் விவகாரமாக மாறியுள்ளது.

இந்த நிலைமை இலங்கைக்கு ஏற்படுவதற்கு முன்னர் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை நாடு செய்து கொள்வது கட்டாயம். வர முன் காப்பது சிறந்தது அல்லவா...?




# நுஜா ஊடக அமைப்பின் 21ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் கௌரவிப்பு நிகழ்வும்

(எஸ்.எம்.அறூஸ்)

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒலுவில் மசாலா கார்டனில் இடம்பெற்றது.

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் பாறூக் நஜீத், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்கள் எம்.றுக்ஸான், சபூர் ஆதம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாலமுனை அமைப்பாளர் ஏ.எல்.எம்.அலியார், ஈ.சி.என். கல்லூரியின் பணிப்பாளர் பாஸித், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் இணைப்பாளர் யூ.எம்.ஹபீஸா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




இங்கு தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தவிசாளர் ஏ.எல்.றமீஸ் வரவேற்பு உரை நிகழ்த்தியதுடன் தலைவர் எஸ்.எம்.அறூஸால் தலைமை உரை

தொடர்ச்சி▼













# நுஜா ஊடக அமைப்பின் 21ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் கௌரவிப்பு நிகழ்வும்

தொடர்ச்சி▲

நிகழ்த்தப்பட்டது.

நுஜா ஊடக அமைப்பு கடந்த 21 வருடங்கள் கடந்து வந்த பாதையை மிக சிறப்பான முறையில் சபையோருக்குத் தெளிவுபடுத்தியதுடன், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்துப் பேசினார்.

மேலும், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் பலரும் உரையாற்றியதுடன் நுஜா ஊடக அமைப்பின் பணிகளையும் பாராட்டிப் பேசினர். அத்தோடு ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு ஊடகவியலாளர்கள் நவீன தொழிநுட்பத்துறையில் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், அதன்மூலம் தங்களது வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் எனவும் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் சபூர் ஆதம் இங்கு குறிப்பிட்டார்.

அரசியல்வாதியாக இருந்தாலும், வேறு எந்த சக்தியாக இருந்தாலும் அவர்களைப் பற்றிய நல்ல விடயங்களை எழுதுவது போல், அவர்கள் விடுகின்ற பிழைகளையும்,மோசடிகளையும் எழுதுவதற்கு பயப்படக்கூடாது. நூன் ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தில் ஒருபோதும் தலையிவதில்லை என அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் பாறூக் நஜீத் தெரிவித்தார்.

இங்கு, ஊடகவியலாளர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் சமூகப்பணி செய்துவரும் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்கள் சபூர் ஆதம்,எம்.றுக்ஸான், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் பாறூக் நஜீத், மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் இணைப்பாளர் யூ.எம்.ஹபிஸா ஆகியோர் பொன்னாடை போர்த்திப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

மேலும், இயற்கை குளியல் பொதி தயாரிப்பில் ஈடுபடும் ஏ.எல்.பாத்திமா பர்ஹானா இங்கு அம்பாறை மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் தலைவி யூ,எல்.சிப்லியா மற்றும் பாத்திமா அப்ரின் ஆகியோரினால் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டு இங்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி தலைவராக எஸ்.எம். அறூஸ், பிரதித் தலைவராக ஏ.எல். றமீஸ், உப தலைவர்களாக எஸ்.எல். மன்சூர், ஹிதாயா நௌபல், செயலாளராக எம்.எச்.முஸ்தாக் முகம்மட், பிரதிச் செயலாளராக ஏ.எல்.கியாஸ்தீன், பொருளாளராக எஸ்.எல்.எம்.அபூபக்கர், தவிசாளராக யூ.எம்.ஹபீஸா, பிரதித் தவிசாளராக பௌமி, தேசிய அமைப்பாளராக பைசல் இஸ்மாயில், உயர்பீட உறுப்பினர்களாக ஏ.சி.றியாஸ், எம்.ஏ.எம்.மாஹிர், எச்.பாரீஸ்,நௌசாட், ஹமீட், எஸ்.எல். பாத்திமா அப்ரின், எம்.எல்.எம்.பாரீஸ்,ஏ. ஆர்.எம்.சியாத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.







# சாவகச்சேரிப் பொது நூலகத்தின் பரிசளிப்பும் நகர மஞ்சரி வெளியீடும்

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சாவகச்சேரிப் பொது நூலகத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா மற்றும் நகர மஞ்சரி இரண்டாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு ஆகியன வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் வாசிப்பின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திய நடைபவனியுடன் ஆரம்பித்து நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா. பார்த்திபனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்வி பணிப்பாளர் (தமிழ்த் துறை) ப.பரணிதரனும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி இந்து தேசிய பாடசாலையின் அதிபர் நா. சர்வேஸ்வரன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் ஐ.தேவஈஸ்வரன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி த. பாலசுப்பிரமணியம், சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருமதி வி. சனாதனன் மற்றும் சாவகச்சேரி சத்தியம்மன் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க.ரமணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய வாசிப்பு மாதத்தின் பாடசாலை மட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள், முன்பள்ளி மட்ட போட்டிகளில் பங்கு பற்றிய முன்பள்ளிப் பிள்ளைகள், வாசகர் மட்ட போட்டிகளில் வெற்றியை பெற்றுக் கொண்ட நூலக வாசகர்கள் ஆகியோருக்கான பரிசல்களும், சிறந்த நூலக அங்கத்தவர், சிறந்த சிறுவர் பகுதி நூலக அங்கத்தவர், சிறந்த பத்திரிகை துறை வாசிப்பாளர் ஆகியோருக்கான விருதுகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் இந்நிகழ்வில் நகரமஞ்சரியின் இரண்டாவது இதழ் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றது.



# உயர்தர பரீட்சார்த்திகளுக்கு ஆசி வேண்டி விசேட பூசை!




(வி.ரி. சகாதேவராஜா)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2025 தோற்றும் முதலைக்குடா மாணவர்களுக்கு இறை ஆசி வேண்டி இன்று (10) திங்கட்கிழமை காலை முதலைக்குடா ஸ்ரீபாலையடி விநாயகர்ஆலயத்தில் விசேடபூசை இடம்பெற்றது.

# கணித ஒலிம்பியாட் போட்டியில் ஒரே குடும்பத்தில் மூவர் வெற்றி!







(றிஸ்வான் சாலிஹூ)

அண்மையில் நடைபெற்று முடிந்த தென்கிழக்காசிய கணித ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சையில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒரே குடும்ப மூன்று மாணவர்கள் வெற்றி பெற்று இம்மண்ணுக்கும் குடும்பத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

குறித்த இப்போட்டியில் 28 நாடுகளைச் சேர்ந்த அதிகமான மாணவர்கள் ஒன்லைன் மூலம் பங்குபற்றினர். இதில் மூன்று சகோதர சகோதரிகள் இந்தப் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றிருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக உள்ளது.

இவர்கள் அனைவரும் இந்தோனேசியாவில் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உலகத்தரம் வாய்ந்த போட்டியில் பங்கு கொள்ளவுள்ளனர்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் மஹ்பூப் அஹ்மத் யஸ்ரி தேசிய ரீதியில் முதலாவது இடத்தையும், அக்கரைப்பற்று ஸாஹிரா கல்லூரி மாணவி மஹ்பூப் பாத்திமா முவப்பிக்கா இரண்டாவது இடத்தையும், அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலய மாணவன் மஹ்பூப் றாசீம் மூன்றாவது இடத்தையும் பெற்று இவர்கள் தேசிய ரீதியில் சாதனை படைத்துள்ளனர்.

இந்த மூன்று மாணவர்களும் கல்முனை தொழில் திணைக்களத்தில் தொழில் அலுவலகராக கடமையாற்றும் எம். ஐ. மஹ்பூப்பின் பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட பண்ணிசைப் போட்டியில் காரைதீவு அறநெறி மாணவர் முதலிடம்



(வி.ரி.சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய இவ்வாண்டுக்கான அறநெறி மாணவர்களுக்கான தேசிய மட்ட பண்ணிசைப் போட்டியில் காரைதீவு கண்ணகி அறநெறி பாடசாலை மாணவர்கள் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இந்தப் போட்டி கொழும்பு கலைமகள் தமிழ் மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தை எதிர்த்து போட்டியிட்ட அம்பாறை மாவட்ட காரைதீவு அணி முதலிடத்தை பெற்றுக்கொண்டது.



# நிந்தவூர் கலாசார மண்டபத் திருத்தத்துக்கு 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

2026 ஆம் ஆண்டு அபிவிருத்திக்கான வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் நிந்தவூர் கலாசார மண்டபத்தைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அரசியலமைப்புப் பேரவை உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா முன்வைத்த வேண்டுகோளுக்கு அமைய, அரைகுறையாகக் காணப்பட்ட நிந்தவூர் கலாசார மண்டபத்தைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.









# அட்டாளைச்சேனை ரஹ்மானியாபாத் வீதிக்கு காப்பெட் போடும் பணிகள் ஆரம்பித்து வைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அட்டாளைச்சேனை ரஹ்மானியா பாத் வீதி, 7.0 மில்லியன் ரூபா செலவில் 600 மீற்றர் தூரம் காப்பெட் வீதியாகச் செப்பனிடும் பணிகள் நேற்று (09) ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், இலங்கை அரசிய லமைப்பு பேரவையின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூ பக்கர் ஆதம்பாவால் உத்தியோகபூர் வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச தேசிய மக்கள் சக்தி அமைப் பாளர் சுல்தான் சத்தார், அட்டாளைச் சேனை தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், பிரஜா சக்தி குழுக் களின் தவிசாளர்கள், அட்டாளைச் சேனை பிரதேச சபை உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தி யோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப் பினரின் இணைப்பு செயலாளர் ஆசிரி யர் எஸ்.எம். ஆரிப் உட்பட பொது மக் களும் கலந்து கொண்டனர்.




# பெரிய நீலாவணையில் மாநகர கலாசார மண்டபம்

## ஆளுநர் திறந்து வைத்தார்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

உள்ளூர் அபிவிருத்தி ஒத்துழைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் 65 மில்லியன் ரூபா நிதியில் கல்முனை மாநகர சபையால் மருத முனை, பெரிய நீலாவணையில் அமைக்கப்பட்டுள்ள மாநகர கலாசார மண்டபத் திறப்பு விழா நேற்று ஞாயிற் றுக்கிழமை (09) கோலாகலமாக நடைபெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு, இதனைத் திறந்து வைத்தார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா, கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலா ளர் ஜே. லியாகத் அலி, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி, கல்முனை மாநகர சபை யின் கணக்காளர் ஏ.எஸ். மனாசிர் அஹ்சன் ஆகியோர் உரையாற்றி னர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஷட். ஏ.எம். பைஷல், கிழக்கு மாகாண சபை யின் கணக்காளர் முஹம்மட் சாலின், கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ. மஜீட், ஓய்வுபெற்ற நீதிபதி ரீ.எல்.எம். மனாப், தேசிய மக்கள் சக்தியின் பிரதேச அமைப்பாளர் முஹம்மட் றினாஸ் உட்பட கல்முனை மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# இரத்த சர்க்கரையை மட்டுமே குறைப்பது ஒரு தீர்வல்ல...!

## நீரிழிவு நோயில் சித்த மருத்துவத்தின் பங்கு

● பூ.லின்ரன்

*(நவம்பர் 14 உலக நீரிழிவு தினம். இதனை முன்னிட்டு, அரச வேலையை எதிர்பார்க்கும் சித்த மருத்துவர் சங்கத்தின் நீரிழிவு பிரிவு வைத்தியர்கள் வெளியிட்ட அறிக்கை.)*

இன்றைய அதிவேக வாழ்க்கைமுறை, ஒழுங்கற்ற உணவு பழக்கங்கள், உடற்பயிற்சி குறைபாடு, மன அழுத்தம் ஆகியவை நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கையை உலகளவில் அதிகரிக்கச் செய்கின்றன. இன்று ஒவ்வொரு பத்துப் பேரில் ஒருவராவது இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர் என்பது மருத்துவ புள்ளி விவரங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சித்த மருத்துவத்தின் பார்வையில், நீரிழிவு என்பது உடலின் மூன்று தாதுக்களின் (வாதம், பித்தம், கபம்) சமநிலையின்மை காரணமாக ஏற்படும் நோயாகக் கருதப்படுகிறது. எனவே, வெறும் இரத்த சர்க்கரை அளவை குறைப்பது மட்டுமல்லாமல், உடல், மனம், ஆன்மா ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நலனை நோக்கமாகக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

அதிக இனிப்பு, எண்ணெய் உணவுகள், இரவில் தாமதமாக உறங்குதல், மரபணு காரணிகள் ஆகியவை நீரிழிவுக்கான முக்கியமான காரணிகளாகும்.

தாகம், அடிக்கடி சிறுநீர் கழித்தல், உடல் எடை குறைவு, பார்வை மங்கல் போன்றவை இதன் வழக்கமான அறிகுறிகள் ஆகும்.

சித்த மருத்துவம் இயற்கை மூலிகைகளைக் கொண்டு நீரிழிவு கட்டுப்படுத்துவதற்கான நம்பத்தகுந்த வழிமுறைகளை வழங்குகிறது. இந்த மருந்துகள் அரச சித்த வைத்தியர்களின் ஆலோசனையுடன் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

சித்த சிகிச்சை மூன்று நிலைகளில் நடைபெறுகிறது.

1. உடல் சுத்திகரிப்பு – திரிபலா சூரணம், நாவல் விதை சூரணம் போன்ற மருந்துகள்.

2. நோயைக் கட்டுப்படுத்துதல் – நோயின் அடிப்படை காரணிகளைச் சீர்செய்யும் சிகிச்சை.

3. வாழ்க்கைமுறை மாற்றம் – யோகாசனம், நடைபயிற்சி, மற்றும் ஆரோக்கிய உணவுப் பழக்கம்.

சமீபத்தில் பேராசிரியர் ரெஸ்னி காசிம் குறிப்பிட்டபடி, நீரிழிவு கால்காயங்கள் சில சமயங்களில் புற்றுநோயை விட ஆபத்தானவை. இதனையடுத்து, அரச வேலை எதிர்பார்க்கும் சித்த மருத்துவர் சங்கமாகிய நாம், சித்த மருத்துவத்தை தேசிய நீரிழிவு சுகாதாரத் திட்டங்களில் இணைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தோம்.

சித்த மருத்துவத்தில் கால்காயங்களுக்கு பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் மற்றும் வெளிச்சிகிச்சை முறைகள் உள்ளன. அவை நரம்பு, இரத்த ஓட்டக் கோளாறுகளைச் சரிசெய்து நோயாளிகளை குணமடையச் செய்கின்றன.

மேற்கத்திய மருத்துவர்களுடன் இணைந்து சித்த வைத்தியர்கள் பணியாற்றும் சூழல் உருவானால், நோயாளிகளுக்கு ஒருங்கிணைந்த சிறந்த பராமரிப்பு கிடைக்கும்.

இலங்கையில் தற்போது சுமார் 20 லட்சம் மக்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆரம்ப நிலைகளிலேயே சித்த சிகிச்சை அளிக்கப்பட்டால், கால்காயங்களின் கடுமையான விளைவுகள் மற்றும் உறுப்புகள் இழப்பைத் தவிர்க்க முடியும்.

இலங்கையின் பொரளை தேசிய ஆயுள்வேத வைத்தியசாலை, கம்பஹா விக்கிரமராச்சி ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, கைதடி சித்த போதனா வைத்தியசாலை, கோணேசபுரி சித்த போதனா வைத்தியசாலை, மஞ்சந்தொடுவாய் மற்றும் நிந்தவூர் யூனானி ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை, பல்லேகலை, தியத்தலாவ, அநுராதபுரம் மாகாண ஆயுள்வேத வைத்தியசாலை, இரத்தினபுரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை, டீ.பீ. வெலகெதர மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை, கல்முனை, மொல்லிகொட, மின்னேரியவில் அமைந்துள்ள ஆயுர்வேத வைத்தியசாலை. ஓந்தாச்சிமடம், கப்பல்துறை, மாதம்பே, ஏறாவூர், மட்டக்களப்பின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு ஆகிய ஆதார வைத்தியசாலைகள், தள வைத்தியசாலைகளான மன்னார், வவுனியா, அச்சுவேலி, கிளிநொச்சி, கொத்மலை, கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலைகளான நேபட, வீதியகொட, கோபாலபுரம், பண்டத்தரிப்பு, கொடிகாமம், பன்விலை, நில்தண்டாஹின்ன, தொலுவ, நாரம்மல, நெதலகமுவ, வாரியபொல, அம்பன்பொல, முருதென்கே, நோர்த் மாத்தளை, தென்ன, கெலிஓய, தொலுவ ஆகிய இடங்களிலும் ஆயுள்வேத வைத்தியசாலைகள் சிறப்பாக இயங்கி வருகின்றன.




இலங்கையின் சகல பிரதேச சபைகளின் கீழும் இயங்கும் இலவச சுதேச மருத்துவமனைகள் வழியாகவும் பொது மக்கள் தரமான சிகிச்சைகளை இலவசமாகப் பெறமுடியும்.

எனினும், இந்தச் சேவைகள் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் பலர் இதன் முழுப் பயனையும் பெற முடியாமல் உள்ளனர்.




# மலையக பெருந்தோட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் உயர்தரப் பரீட்சைக்கு!

**(எஸ். சதீஸ், மஸ்கெலியா நிருபர்)**

மலையக பெருந்தோட்ட பகுதி மாணவர்கள் இன்று (10) ஆர்வத்துடன் உயர்தரப் பரீட்சைக்கு தோன்றினர்.

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் மலையக பெருந்தோட்ட பாடசாலை மாணவர்களும் ஆர்வத்துடன் பரீட்சைக்கு தோற்றியதை அவதானிக்க முடிந்தது.

நாடு முழுவதுமுள்ள 2362 பரீட்சை நிலையங்களில் இந்த முறை உயர்தரப் பரீட்சைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கு 3,40,525 பரீட்சார்த்திகள் தகுதி பெற்றுள்ளனர். 2,46,521 பாடசாலை பரீட்சார்த்திகளும், 94,004 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இதில் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.




# சிவதொண்டர் திருக்கூட்ட 350 ஆவது பணியாக திருமூலர் குருபூசையும் கலாசார நிகழ்வுகளும்!

**(பழுவூரான்)**

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசனை வழிகாட்டலில், கிருஷ்ணா ஆன்மீக எழுச்சி ஊர்வலமும் திருமூலர் குருபூசையும் அறநெறிப்பாடசாலைமாணவர்களுக்கு இடையிலான கலாசார போட்டிகளும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கும் நிகழ்வும் கருங்காலிச்சோலை கிருஸ்ணா வித்தியாலய மண்டபத்தில் நேற்று (09) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட சிவதொண்டர் திருக்கூட்டம், கோறளைப்பற்று பிரதேச இந்து அறநெறிப் பாடசாலை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கருங்காலிச்சோலை கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை, கிராமத்தில் உள்ள ஆலயங்கள், உலக சிவனடியார்கள் திருக்கூட்டம், நடராஜர் சைவசித்தாந்த பயிற்சி மையம் ஆகியன இணைந்து இதனை நடத்தின.

கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி.பி.கிருசாந்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிவதொண்டர் திருக்கூட்டத்தின் தலைவர் சிவதொண்டர் கே.கமல்ராஜ், உபதலைவர் சிவதொண்டர் எஸ்.கருணைராசா, இணைப்பாளர்களான சிவதொண்டர் எஸ்.சுதர்சன், சிவதொண்டர் எஸ்.ஜெயபாலன், சிவதொண்டர் எஸ்.மிதுன், எஸ். நடராஜன், சைவசித்தாந்த பயிற்சி மையத்தின் தலைவர் சைவப்புலவர் திருமதி ஞா.சிவானந்தஜோதி மற்றும் கோறளைப்பற்று பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பிருந்தாபன் மற்றும் ஆலய பரிபாலன சபையினர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் தாய்த்தமிழ் சைவசமய உறவுகளின் பங்கு பற்றுதலுடன் நிகழ்வுகள் நடைபெற்றன.






# ரீ கடையும் சமூகமும்...!

இன்றைய உலகமானது நவீனத்துவத்தின் விம்பத்தையும் கைத்தொழில் மயமாக்கத்தின் சாயலையும் சுமந்து சுழல்கின்றது எனலாம். ஒரு மனிதனின் உணவு, உடை, கலாசாரம், பாதுகாப்பு வழிமுறை என்பன நவீனத்துவத்தினாலும், நகராக்கத்தின் செல்வாக்காலும் புதிய தொழிநுட்ப வளர்ச்சியாலும் மாற்றமடைந்து செல்கின்றன. தனது அன்றாட உணவைக்கூட உண்ண நேரமின்றி இயங்கிக் கொண்டிருக்கும் மக்களிடையே ஒரு சிலரே தன்னுடைய நேரத்தினை மகிழ்ச்சிகரமாக, பயனுள்ளதாக செலவிடுகின்றனர். அவ்வாறு செலவிடுகின்ற நேரம் ஒரு ரீ கடையில் என்றால் உண்மையில் மகிழ்ச்சியின் விளிம்பில் நிற்போர் ஏராளம். ரீகடை வெறும் இடமாக அல்லாமல் சமூகமயமாதலிலும், சுயதொழில் சார்ந்தும் மனிதனுக்கு நண்பனாக அமைவதை இந்த எழுத்தாவணத்தில் ஆராயலாம்.

இன்றைய அவசர வேலையுலகில் விசேட உணவுகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் நிலையில் அதிலும் இலகுவாகவும், விரைவாகவும் உண்ணும் உணவுகளுக்கே முதன்மை இடம் கொடுக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சமூகத்தில் பலரின் காலை உணவாக ரீயும், வடையும் அல்லது ரீயும் உலர் உணவு பொருள்களுமே பெரும்பாலும் அமைகின்றன.

பல்கலைக்கழகத்தில் கல்விகற்கின்ற மாணவர்கள் முதல் அன்றாட தினக்கூலி வேலை செய்கின்ற சமூகம் வரை காலை உணவு ரீ என்பது நிதர்சனமான உண்மையே.

ஒரு டீயின் முக்கியத்துவம் காலை உணவில்மாத்திரம்முழுமைஅடைந்துவிடுவதில்லை. வறுமையின் நிறம் சிவப்பு என்பார்கள். இன்று வறுமையில் உள்ள மனிதனுக்கு கூட டீ தான் உணவாக அமைகின்றது. சாதாரணமாக அருந்தும் பானம்தானே என்று பலர் நினைத்தாலும் அந்த ரீ தான் இன்று ஒரு சமூகம் கூடி இருப்ப தற்கு காரணமாக விளங்குகின்றது.

இன்றைய சமூக ஊடகங்களின் செல்வாக்கு அற்ற காலத்தில் ஆலமரத்தின் நிழலில், ஓர் ஊரின் சந்தியில் அமைந்த ரீ கடை ஒரு ஊரின் அடையாளமாகவும், முகவரி தெரியாத நபர்களுக்குக் கூட வழிகாட்டும் இடமாகவும், பஸ் வண்டிகளை நிறுத்தும் தரிப்பிடமாகவும் இருந்திருகின்றன. இன்றைய காலத்திலும் கூட இனம் தெரியாத நபர்கள் கூட சந்தித்து உரையாடும் களமாக ரீ கடைகள் விளங்குகின்றன.



மதிவாணன் கார்த்திகேசன்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இன்றைய காலத்தில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் காலையும் மாலையும் இயங்கும் இந்த ரீ கடைகளில் விதவிதமான ரீ வகைகள் செய்யப்படுகின்றன. மசாலா ரீ, இஞ்சி தேநீர், இஞ்சி ரீ, எலுமிச்சை ரீ, கிறீன்ரீ, ஏலம், கராம்பு சேர்த்த ரீ போன்றன இன்று பெரும்பாலான ரீ கடைகளில் காணமுடியும். சமூக ஊடகங்களில் ரீ கடை சார்ந்த காணொளிகள், சுற்றுலா சார்ந்த காணொளிகளில் ரீ அருந்தும் காட்சிகள் என்பன இன்றைய சமூகத்தினர் மத்தியில் ரீ கடை சார்ந்த கலாசாரத்தையே கட்டமைத்துள்ளது எனலாம்.

ஒரு காலத்தில் அரசியல் சார்ந்த விடயங்களினை விவாதிக்கும் களமாக இந்த ரீ கடைகளே விளங்கியன. ரீ அருந்துவதற்காக வருகின்ற நபர்கள் வாசிக்க பத்திரிகைகள் இருந்தன. செய்திகள் கேட்பதற்காக சிறிய வானொலிப்பெட்டிகளும் காணப்பட்டன.

தொடர்ச்சி▼

# ரீ கடையும் சமூகமும்...!

தொடர்ச்சி▲

சிறிய ரீ கடையாக காணப்பட்டாலும் கூட அதனை சுற்றி இயங்கும் சமூகத்தினரின் அளவு கடையை விட அதிகம். ஆனால் இன்று சமூக ஊடகங்களின் வருகையும், நவீன கை யடக்க தொலைபேசிகளின் தொடுதிரைகளில் செய்திகளும், உலகமும் அடங்கிவிட்டன.ஆனாலும் இன்றைய ரீ கடைகளிலும் சமூகமயமாக்கல் நடக்கின்றது என்று கூறினால் நம்ப முடிக்கின்றதா? உண்மையில் இன்றைய ரீ கடைகள் கூட விளை யாட்டு, சினிமா, உணவுமுறை, ஆடைகள் சார்ந்து இளைஞர்கள் விவாதிக்கும், விமர்சிக்கும் இடங்களாக காணப்படுகின்றன.

அரசியல் சார்ந்த பேச்சுகள் ரீ கடைகளில் குறைந்தாலும் பொருள்களின் விலைவாசி அதி கரிப்பு, ஒரு ஊரில் நடக்க இருக்கும் திருமணம் சார்ந்த விடயங்கள், திருவிழாக்கள், தனது தொழில் சார்ந்த விடயங்கள், வாகன இறக்குமதி, புதிய தொலைபேசி வருகை, ஆடைகள் மலிவாக கிடைக்கும் இடங்கள் போன்ற பல விடயங்கள் பேசப்படுகின்றன.

ஒருவரின் கருத்தை மதித்துப் பிறர் செவி சாய்க்கும் இடங்களில் முதன்மை பெறும் ரீ கடைகளில் தான் ஒருவரின் உடல் மற்றும் மனம் சார்ந்த பிரச்சினைகள் பேசப்படுவதுடன் அதற்கான தீர்வுகளும் கலந்துரையாடப்படுகின்றன. புதிய நபர்களின் நட்புகரம் கோர்ப்பதும் இங்குதான். ஒரு தனி மனிதன் குடும்பமாகி, குடும்பங்கள் இணைந்து உருவாக்கவேண்டிய சமூகத்தை ஒரு ரீ கடை கட்டமைக்கின்றது.

இலங்கையிலும் பல மாவட்டங்களில் ரீ கடைகள் காணப்படுகின்றன. அவை ஒருபுறம் சமூகத்தைக் கட்டமைத்தாலும் கூட மறுபுறம் சுய தொழில் வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுக்கின்றன. அவ்வாறு சாய் ரீ கடை என்ற பெயரில் ரீ கடையை சுயதொழிலை மேற்கொள்ளும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 23 வயதையுடைய டி.பானுஜனை சந்தித்து உரையாடியபோது பல கருத்துக்களையும், தன்னுடைய அனுபவங்களையும் எம்முடன் பகிர்ந்துக்கொண்டார்.

“நான் இந்த சாய் கடையை இந்த வருடம் ஜூலை மாதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு முன்னாள் உள்ள நடைபாதைக்கு அருகில் ஆரம்பித்தேன். ரீ கடை ஆரம்பித்து ஒன்றரை மாதம்வரை என்னுடைய ரீ கடை சிறப்பாக இயங்கியது. பின்னர் நடைபாதைகளில் கடைகள் போடக்கூடாது என்று பிரதேச சபை அறிவித்தது.

இதனால் இந்த ரீ கடையை வேறு எந்த இடத்தில் போடலாம் என்று இடத்தைத் தேடிச் சென்றோம். இடத்தை தேடும் முயற்சியிலேயே ஒரு மாதகாலம் சென்றுவிட்டது. அந்த ஒரு மாத காலம் கடையும் வியாபாரமின்றி மூடி வைக்க வேண்டியதாக இருந்தது.” என்று கூறினார்.

ஒரு ரீ கடை ஆரம்பிக்கவேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது? என்ற கேள்வியை அடுத்ததாக கேட்டேன்.

“என்னுடைய நண்பர்கள் நான்கு பேர் சேர்ந்து வவுனியா பல்கலைக்கழகத்தில் கல்விகற்றோம். அந்த பல்கலைக்கழகத்தின் மூலமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் youth leadership என்ற ஒரு பாடத்தைக் கற்பித்தனர். அந்தப் பாடம் முடிவடைந்தபோது எங்களால் முடிந்த சுயதொழில் சார்ந்த திட்டமொன்றை முன்வைக்குமாறு கூறினார்கள். அதற்காக நாங்கள் இன்று இருக்கும் PICK ME போல PICKLE என்ற ஒரு திட்டத்தை முன்வைத்தோம். PICK ME, UBER EAT என்பன யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தும் முன்னமே நாங்கள் இந்த திட்டத்தை முன்வைத்து அதற்கான பாதீட்டையும் சமர்பித்தோம். ஆனால் அதனை பாடத்துறை சார்ந்த பேராசிரியர்கள் நிராகரித்தனர்.

ஏன் நிராகரித்தார்கள் என்பதற்கான காரணம் இன்றுவரை தெரியாது. ஆனால் அதற்குப் பிறகே இந்த ரீ கடை ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.”என்று பதிலளித்தார்.

ஒரு நாளைக்கு அவருடைய ரீ கடையில் எவ்வளவு வியாபாரம் ஆகின்றது என்ற கேள்வியினை அடுத்ததாக கேட்டபோது,

“எவ்வளவு வியாபாரம் ஆகும் என்பதை தவிர்த்து ஒரு நாளைக்கு எவ்வளவு லீற்றர் பால் முடிவடையும் என்று கூறுகின்றேன். சாதாரணமாக எமது சாய் ரீ கடையில் 7 லீற்றர் பால் முடிவடையும். ஒரு நாளில் கூடலாம் மற்றுமொரு நாளில் குறையலாம். ஆனாலும் அளவு 7 லீற்றர் பால்தான்.” என்று தெரிவித்தார்.

அடுத்ததாக தன்னுடைய ரீ கடையில் வாடிக் கையாளர்கள் அதிகம் விரும்பும் ரீ எது? என்றும் யார் அதிகம் ரீ கடைக்கு வருகின்றார்கள் போன்ற கேள்விகளை கேட்டபோது,

“மசாலா ரீ தான் அதிகம் விரும்பி அருந்துகின்றனர். மசாலா ரீயுக்கான மசாலாவை நாங்கள் நான்கு பேர்தான் தயாரிக்கின்றோம். எங்கள் கடை ஆரம்பிக்கபட்டபோது முதலில் வாடிக்கையாளராக வந்தவர்கள் எங்களுடைய நண்பர்கள் தான். பிறகு ரீ கடைக்கு பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள், ஊர் மக்கள் என பலரும் வருகைத்தர ஆரம்பித்தனர்.” என்று கூறினார்.

அடுத்ததாக ஒரு டீ கடை இல்லை என்றால் அந்த ஊர் எப்படி இருக்கும்?என்ற கேள்வியினை எழுப்பியபோது, “எங்களுடைய ரீ கடை இருக்கின்றபோது ஆள்களின் நடமாட்டம் இருந்ததோடு அந்த இடமே கலகலப்பாக இருக்கும்.நிறைய இளைஞர்கள் கூடுகின்ற இடம் ரீ கடைதான். அப்படி ஒரு கடை இல்லை என்றால் அந்த தெருவோ, இடமோ ஆள் நடமாட்டம் இன்றி வெறுமையான இடமாக காட்சியளிக்கும்” என்று குறிப்பிட்டார்.

இறுதியாக அவரிடம் தன்னுடைய ரீ கடை சார்ந்து மறக்க முடியாத நினைவுகள் எவை? என்று வினவியபோது, “தன்னுடைய ரீ கடையை உருவாக்குவதற்காக நானும்,என்னுடைய நண்பர்களும் இரவு, பகல் பாராமல் வேலை செய்தது மறக்கமுடியாத நினைவு” என்று கூறினார்.

இந்த ரீ கடையை டி. பானுஜன், எஸ். பிரணவன், ஜி. சங்கீத்தனன், பி. தனோயன் ஆகிய நான்கு இளைஞர்கள் சேர்ந்து நடத்துகின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் கல்வி கற்றுக்கொண்டே இந்த ரீ கடையை நடத்துவது சிறப்பான விடயம் என லாம்.

இன்றைய காலத்தில் வேலையில்லா பிரச்சினை நாட்டின் முதன்மை பிரச்சினைகளில் ஒன்றாக காணப்படுகின்றது. அவ்வாறான சூழ்நிலையில் ரீ கடை போன்ற சுயதொழில் வாய்ப்புகளும் உள்ளன. அதே சமயம் இன்று நட்சத்திர விடுதிகளின் அதிகரிப்பு, விசேட உணவுகள் விற்கப்படும் இடங்களை தேடி செல்லும் சமூகத்தினர் ஊரில் இயங்கும் ரீ கடைகள் சார்ந்து சிந்திக்கும்போது அழிவடைந்து செல்லும் ரீ கடைகளும் வாழ்வு பெறும்.




# கொரோனாவுக்கு பின்னரான இலங்கையின் பயணக் கலாசாரம்...!

மனித வாழ்க்கையின் ஒரு பகுதி பயணம். உலகம் ஒரு புத்தகமெனில் பயணம் செய்யாதவர் அதில் ஒரு பக்கமேதான் வாசித்தவர் என்று ஒரு பழமொழி சொல்கிறது. இந்த பயணத்தின் போது நாம் பார்வையிடும் இடங்கள் மட்டுமல்ல, அந்த இடத்தில் வாழும் மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, மொழி, உணவு, வாழ்க்கை முறை ஆகியவற்றையும் நாம் அனுபவிக்கிறோம். இதுவே பயண கலாசாரம் எனப்படுகிறது.

பயணம் என்பது வெறும் பொழுது போக்கு அல்ல. அது அறிவை விரிவு படுத்தும் ஒரு வாய்ப்பு. ஒவ்வொரு இடமும் தனித்துவமான பண்பாட்டை கொண்டுள்ளது. அந்த இடங்களைச் சென்று நேரில் பார்க்கும்போது, அந்தப் பண்பாட்டை நாம் உணர முடிகிறது. இது நம்மை பிறரை மதிக்கவும், புரிந்துகொள்ளவும், ஒற்றுமையை வளர்த்துக்கொள்ளவும் உதவுகிறது. இருவழிப் பண்பாட்டு பரிமாற்றம் நடைபெறும். ஒரு பயணி, புதிய இடத்தைச் சென்று அங்குள்ள பண்பாட்டை அறிந்து கொள்கிறார். அதே நேரத்தில், அவர் தன் சொந்த பண்பாட்டையும் அங்குள்ள மக்களிடம் பகிர்கிறார். இது உலகளாவிய ஒற்றுமைக்கு வழிவகுக்கும்.

இன்றைய உலகம் நுட்பமாக வளர்ந்து வருகிறது. இணையம், சமூக ஊடகங்கள் மூலம் பயண அனுபவங்கள் ஒருவரிடமிருந்து



பாலையா ரோஜனகுமார்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

மற்றவருக்கு எளிதாக பகிரப்படுகின்றன. ஆனாலும், நேரில் சென்று அனுபவிப்பதற்கே தனி சிறப்பு உண்டு. தற்போதைய பயண கலாசாரம் சுய அனுபவம், புகைப்படங்கள், வீடியோக்கள், வலைப்பதிவுகள் போன்றவையே ஆகிவிட்டன.

இது புதிய தலைமுறையை பயணத்தால் கவர்கிறது. சமீப காலங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து அதிகம் பேசப்படுகிறது. சுற்றுச்சூழலை காக்கும் வகையில் பயணிகள் தற்போது சுதேச சுற்றுலா, பசுமை பயணம், குறைந்த மாசுபாடு கொண்ட பயண முறைகளைத் தேர்வு செய்கின்றனர். இது பயண கலாசாரத்தின் ஒரு முன்னேற்றமான மாற்றமாகும். பயண கலாசாரமானது பயணிகளுக்கும், அவர்களால் பயணிக்கப்படும் இடங்களுக்கும் இடையே ஏற்படும் பண்பாட்டு உறவின் வெளிப்பாடு. இது மனிதரை மனதிலும் அறிவிலும் வளரச் செய்கிறது. நாம் உலகை அறிந்து கொள்ளும் முக்கிய வழிகளில் ஒன்றாக பயண கலாசாரம் திகழ்கிறது. மனித சமூகத்தினுள் புரிதல், அமைதி மற்றும் ஒற்றுமையை கட்டியெழுப்ப இது பெரிதும் உதவுகின்றது.

இலங்கை, இந்தியப் பெருங்கடலின் முத்து என அழைக்கப்படும் ஒரு அழகான தீவு நாடு. இயற்கை வளங்களாலும், பண்பாட்டு பாரம் பரியங்களாலும், வரலாற்றுச் சின்னங்களாலும் அழகுறும் இந்த நாடு, பல்வேறு காலங்களில் உலகின் முக்கிய சுற்றுலா மையமாக இருந்துள்ளது. பயணிகள் வருகை மற்றும் அவர்கள் மூலம் நிகழும் கலாச்சார பரிமாற்றம் இங்கே பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்துள்ளது. இதுவே இலங்கையின் பயண கலாசாரம் எனப்படும். பழங்கால இலங்கைக்கு சீன, அரேபிய, யூரோப்பிய நாடுகளிலிருந்து வணிகர்கள், பயணிகள் வந்துள்ளனர். மார்க்கோ போலோ, இப்னு பத்தூதா போன்ற புகழ்பெற்ற பயணிகள் இலங்கை குறித்து தங்கள் நினைவில் எழுதி வைத்துள்ளனர். இவர்கள் இலங்கையின் புத்த மதம், அரசியல், சமூக வாழ்க்கை ஆகியவற்றை உணர்ந்துள்ளனர். அவர்களால் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் இலங்கையை அறிந்துகொண்டனர்.

இலங்கை, பௌத்த மதத்தின் ஒரு முக்கிய மையமாக விளங்குவ

தொடர்ச்சி▼

# கொரோனாவுக்கு பின்னரான இலங்கையின் பயணக் கலாசாரம்...!

**தொடர்ச்சி▲**

தால், அனுராதபுரம், பொலன்னறுவை, கண்டி போன்ற நகரங்களில் உள்ள பௌத்த கோயில்கள் உலகளாவிய பௌத்தர்கள் வருகைக்கு முக்கிய இடங்களாக இருந்தன. பௌத்தத் தர்மத்தின் பரப்பும், பயணிகளின் வருகையும் ஒன்றிணைந்த பண்பாட்டுப் பரிமாற்றத்தை ஏற்படுத்தியது. பிரித்தானியர்களின் ஆட்சி காலத்தில் தொடர்வண்டி, பாதைகள், ஆடம்பர ஹோட்டல்கள் உருவானதால் அந்நிய நகரங்கள் மற்றும் மலையிடங்கள் முக்கிய சுற்றுலா மையங்களாக மாறின. இலங்கையின் சீலோன் தேயிலை தோட்டங்கள், இலங்கைப்பரப்பு கடற்கரைகள் போன்றவை பாரம்பரியத்துடன் கூடிய சுற்றுலா கலாசாரத்தை உருவாக்கின.

2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்த பிறகு, இலங்கை சுற்றுலா வளர்ச்சியில் புது அவதாரம் கண்டது. பலவகையான பயணிகள் –இயற்கை ஆர்வலர்கள், வரலாறு ஆராய்வோர், உணவுப் பயணிகள், மலை ஏறுபவர்கள் – எல்லோருக்கும் ஏற்ற இடமாக மாறியது. ஆருகம்பே, மிரிஸ்ஸா, எலா, யாலா தேசியப் பூங்கா போன்ற இடங்கள் Instagram மற்றும் சமூக ஊடகங்களில் பிரபலமானவை ஆனதால், இளைய தலைமுறையின் பயண கலாச்சாரம் விரிவடைந்தது. இவ்வாறு கலாச்சார பிரயாண துறையில் பல்வேறு வகையில் அன்னிய செலாவனியை ஈட்டிக் கொண்டிருந்த இலங்கையானது கொரோனாவுக்கு பின்னர் பாரிய அளவிலான ஒரு வீழ்ச்சியை எதிர் நோக்கியது. 2020ல் பரவிய கொரோனா வைரஸ் தொற்று, உலகம் முழுவதும் போன்று இலங்கையையும் கடுமையாக பாதித்தது. சுற்றுலா துறை முழுமையாக முடங்கியது. கொரோனாவுக்கு பிந்தைய காலத்தில், இலங்கையின் பயண கலாச்சாரம் ஒரு புதிய உருவத்தை எடுத்து, நிலையை மீட்டெடுக்கத் தொடங்கியது.

முதல் அதிர்வாக, இலங்கையின் சுற்றுலா வர்த்தகம் மற்றும் பண்பாட்டு பரிமாற்றம் நிறுத்தப்பட்டது. விமானங்கள் நிறுத்தப்பட்டன, ஹோட்டல்கள் காலியானது, வர்த்தகங்கள் சுருங்கின. பன்னாட்டு பயணிகள் வருகை சீராக குறைந்து, பயண கலாச்சாரம் தவிர்க்க முடியாத இடைவெளிக்குள் சென்றது. கொரோனாவுக்குப் பின் பயணிகள் முன்னோக்கிப் பார்ப்பதில் கவனம் செலுத்தினர். பாதுகாப்பும் சுகாதாரமும் முக்கியமாக இருந்தன. இதனால், பயணத்தின் போது பின்பற்றவேண்டிய சில முக்கிய அம்சங்கள் ஏற்பட்டன. முககவசம், கைதுணை, சுகாதார சோதனை போன்ற நடைமுறைகள், டிஜிட்டல் முன்பதிவுகள், தொலைதூர திட்டமிடல், கூட்டம் அதிகமில்லாத இடங்களுக்குச் செல்லும் முன்னுரிமை போன்றன பலப்படுத்தப்பட்டது. இதனால் பயணிகள் அதிக சிரமத்தை எதிர் நோக்கினர்.

அரசியல் மற்றும் பொருளாதார சிக்கல்களால் பன்னாட்டு பயணிகள் வருகை மெதுவாக இருந்ததால், உள்ளூர் சுற்றுலா வளர்ச்சி வலுவடைந்தது. இலங்கை மக்கள் தங்களது நாடு குறித்த அறிவை விரிவாக்கினர். கிராமப்புற சுற்றுலா, இயற்கை சார்ந்த பயணம், கலாச்சார விடயங்களை அனுபவிக்கத் தொடங்கினர் . ஹோம்ஸ்டேய், குறைந்த செலவிலான பயணங்கள் அதிகரித்தன சமூக ஊடகங்களின் பங்கு அதிகரித்தது. பெரும்பாலான இளையர்கள், பயண அனுபவங்களை Instagram, YouTube, TikTok போன்ற ஊடகங்களில் பகிர்ந்தனர். இதனால் இலங்கையின் புதிய இடங்கள் வெளிச்சத்திற்குவந்தன. “அனுபவம் சார்ந்த பயணம்” என்ற புதிய பயண கலாச்சாரம் உருவானது. அறிமுகம் செய்யப்படாத இடங்கள், உணவுகள், கிராமப்புற வாழ்க்கை போன்றவை பிரபலமானது.

கொரோனாவின் தாக்கம் இயற்கையின் முக்கியத்துவத்தை மக்கள் மனதில் உறுதியாக்கியது. இதனால் பசுமை பயணங்கள் (eco-tourism) அதிகரித்தன. சுற்றுச்சூழல் பாதிப்பற்ற பயண வழிகள் பரவலானது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வுடன் கூடிய பயணிகள் அதிகமானார்கள். எதிர்கால நம்பிக்கைகள் இருந்த போதிலும், சில சவால்கள் தொடர்ந்தன. பொருளாதார சரிவு, அரசியல் நிலை, பன்னாட்டு பயணிகள் மீள வருகை குறைவு ஏற்பட்டது. ஆனால், புதிய முயற்சிகள், அரசாங்கம் மற்றும் தனியார் மையங்களின் உதவியுடன் இலங்கை மீண்டும் சுற்றுலா துறையை எழுப்பும் முயற்சியில் உள்ளது. கொரோனாவுக்குப் பின் இலங்கையின் பயண கலாசாரம், ஒரு புதிய முகம் பெற்றது.

முன்னர் இருந்த பொதுவான சுற்றுலா முறைகள் தவிர்த்து, அனுபவம் சார்ந்த, சுயவிவேகம் கொண்ட, கலாசார நட்பு பயணங்கள் உருவானது. இது இலங்கை மக்களிடமும், வெளிநாட்டு பயணிகளிடமும் ஒரு புதிய பார்வையை உருவாக்கியது. எதிர்காலத்தில் இது மேலும் வலுப்பெற்று, இலங்கையின் சுற்றுலா மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஊக்கமாக அமையும்.

இலங்கையின் எதிர்கால பயணக் கலாச்சாரத்தை வலுப்படுத்தும் வழிமுறைகள் பலவாக உள்ளன. முதன்மையாக சுற்றுச்சூழல் நட்பு பயணங்களை ஊக்குவித்து, பசுமை சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும். கிராமப்புறங்களில் ஹோம்ஸ்டேய் வசதிகளை அதிகரித்து, உள்ளூர் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கலாம்.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒன்லைன் முன்பதிவு, பயண பயன்பாடுகள், சமூக ஊடக விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலம் பயண அனுபவத்தை எளிதாக்க வேண்டும். பயண இடங்களில் சுகாதார மற்றும் பாதுகாப்பு அடித்தளங்களை உறுதிசெய்தல், பன்முகப்படுத்தப்பட்ட சுற்றுலா வாய்ப்புகளை உருவாக்கல், அரச மற்றும் தனியார் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் ஆகியவை பயணிகளின் நம்பிக்கையையும், நாட்டின் வருமானத்தையும் உயர்த்தும். இவ்வாறு ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால், இலங்கையின் பயணக் கலாச்சாரம் வலிமையாகவும், நிலைத்து நிற்பவையாகவும் வளர்ச்சி பெறும்.

இலங்கையானது பயண கலாசாரத்தின் ஊடாக பாரிய அளவிலான வருமானத்தை ஈட்டி வந்தது. கொரோனாவுக்கு பின்னரான சூழ்நிலையானது அதிக அளவிலான பயணிகளை தடை செய்ததோடு பல்வேறு வகையான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டது. இதனால் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட இலங்கையின் பொருளாதாரமும் இன்றைய அளவிலும் வலுப்பெறாமல் காணப்படுகின்றது. முன்னைய சூழ்நிலையை மீட்டெடுப்பதற்கு இலங்கையின் கலாச்சார வளையங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் சுற்றுலா துறையில் அதிகளவிலான அந்நிய செலாவணியை ஈட்டிக்கொள்வதோடு இலங்கை நாடு தொடர்பிலான பயணிகளின் எதிர்பார்ப்பையும் வலுப்படுத்த முடியும்.

# எஸ்.ஐ.ஆர். இற்காக வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் குழப்பங்கள்



## முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்காக (எஸ்.ஐ.ஆர்.) வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் ஏராளமான பிரச்சினைகளும் குழப்பங்களும் இருக்கின்றன என முதல்வர் மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள காணொலியில்,

"நம்முடைய தொடர் எதிர்ப்புகளையும் மீறி சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கிவிட்டன. பெரும்பாலான மக்களுக்கு சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்) பற்றி இன்னமும் முழுதாக தெரியவில்லை.

சரியான, உண்மையான வாக்காளர் பட்டியல்தான் நியாயமான தேர்தலுக்கு அடிப்படை. எனவே, வாக்காளர் பட்டியல் திருத்தத்தை தி.மு.க. எதிர்க்கவில்லை. ஆனால், போதுமான கால அவகாசம் கொடுக்காமல் தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் இதை அவசர அவசரமாக செய்வது சரியாக இருக்காது என்பதுதான் நமது நிலைப்பாடு.

தேர்தல் ஆணையத்தோடு கூட்டு சேர்ந்து வாக்காளர் பட்டியலில் பா.ஜ.க. எப்படி எல்லாம் மோசடி செய்துள்ளது என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பத்திரிகையாளர் சந்திப்பு மூலம் விளக்கி இருக்கிறார்.

கேரள முதல்வர் பினராயி விஜயனும், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் கூட எஸ்.ஐ.ஆர்-ஐ தீவிரமாக எதிர்க்கிறார்கள். நாமும் எஸ்.ஐ.ஆர். அறிவித்த உடனே இது சதி என உணர்ந்து எதிர்த்தோம். கூட்டணி கட்சிகளோடு கலந்து பேசினோம். அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டி தீர்மானம் நிறைவேற்றினோம். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறோம். எதிர்வரும் 11 ஆம் திகதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளோம்.

அதற்கு முன்பாக, எஸ்.ஐ.ஆர்-க்காக வழங்கப்படும் கணக்கீட்டு படிவத்தில் எத்தனை பிரச்சினைகள், குழப்பங்கள் இருக்கின்றன என்பதை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எனக்கும் கணக்கீட்டு படிவம் கொடுத்திருக்கிறார்கள். உங்களில் சிலரிடமும் இந்த படிவம் இந்நேரம் வந்து சேர்ந்திருக்கும்.

இதில் முதலில் நமது விவரங்களைக் கேட்கிறார்கள். அடுத்தாக, முந்தைய வாக்காளர் திருத்தப் பட்டியலில் உள்ள வாக்காளரின் உறவினரின் பெயர் கேட்கப்பட்டிருக்கிறது. உறவினர் என்றால் யார் என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. அப்பாவா, அம்மாவா, அண்ணனா, தங்கையா, கணவனா, மனைவியா, பிள்ளைகளா யார்? எல்லோரும்தானே வாக்காளர் பட்டியலில் இருப்பார்கள். இதில் ஏதாவது தெளிவு இருக்கிறதா?

வாக்காளரின் உறவினர் பெயர் என சொல்லப்பட்டுள்ள இடத்தில் முதலில் பெயரும் அடுத்ததாக வாக்காளரின் புகைப்பட அடையாள அட்டை எண்ணும் கேட்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக மீண்டும் உறவினர் பெயர் கேட்கப்பட்டுள்ளது. முதலில், யார் பெயரை எழுத வேண்டும்? எந்த வாக்காளர் விண்ணப்பிக்கிறாரோ அவர் பெயரா அல்லது உறவினர் பெயரா?

சிறிய தவறு இருந்தால்கூட வாக்காளர் பட்டியலில் இருந்து தேர்தல் ஆணையம் பெயரை நீக்கும் ஆபத்தும் உள்ளது. நினைத்துப் பார்க்கவே அச்சமாக உள்ளது. நன்றாகப் படித்து பெரும் பொறுப்புகளில் இருப்பவர்கள் கூட இந்த கணக்கீட்டுப் படிவத்தைப் பார்த்தால் அவர்களுக்கும் தலை சுற்றும்.

இந்த படிவித்தில் வாக்காளரின் புகைப்படத்தை அச்சிட்டு தற்போதைய புகைப்படத்தை ஒட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், மாநில தேர்தல் அதிகாரி, உங்களுக்கு விருப்பம் இருந்தால் ஒட்டலாம் என்று அரசியல் கட்சிகள் பங்கேற்ற கூட்டத்தில் சொல்லி இருக்கிறார். இது மற்றுமொரு இடியாப்ப சிக்கல்.

ஒருவேளை போட்டோ ஒட்டவில்லை என்றால் என்ன நடக்கும்? வாக்குரிமை பறிக்கப்படுா, படாதா? தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரி அதாவது இஆர்ஓ கையில்தான் இந்த முடிவு உள்ளது. இவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான முடிவை எடுப்பார்கள் என்று சொல்ல முடியாது. இப்படி முதல் கோணல் முற்றிலும் கோணல் என்கிற கதையாக எல்லா இடத்திலும் குழப்பம்தான்.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சில அதிமேதாவிகள், இந்த எஸ்.ஐ.ஆர். பணிகளை நடைமுறைப்படுத்துவது மாநில அரசின் பணியாளர்கள்தான் எனும்போது ஏன் தி.மு.க. எதிர்க்க வேண்டும் என்ற புரிதலற்ற உண்மைக்குப் புறம்பான விவரங்களை வைத்துப் பேசுகிறார்கள். ஒரு பணியாளரை தேர்தல் ஆணையம் தனது பணிக்காக எடுத்த நொடியில் இருந்தே அவர் தேர்தல் ஆணையத்துக்கு கட்டுப்பட்டுத்தான் செயல்படுவாரே ஒழிய, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்க மாட்டார்.

மக்களை திசை திருப்பினால் போதும் என தவறான தகவலை பரப்பக்கூடாது. எதையாவது பொய் சொல்லி எப்படியாவது எஸ்.ஐ.ஆர்-ஐ நடத்திடலாமா, ஏழை எளிய மக்களின் வாக்குரிமையை நீக்கிடலாமா என்று எதிர்க்கட்சிகள் நினைப்பது வேதனைக்குரியது." என்று தெரிவித்துள்ளார்.

# எம்மிடம் வாக்கு திருட்டு விவகாரத்தில் இன்னும் விரிவான தகவல்கள் உள்ளன




## ராகுல் காந்தி கூறுகின்றார்

ஜனநாயகமும் அரசமைப்பும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன என்று குற்றம்சாட்டியுள்ள காங்கிரஸ் எம்.பி.யும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, தற்போதைய முக்கிய பிரச்சினை வாக்குத் திருட்டு என்றும் தெரிவித்தார்.

மத்திய பிரதேச மாநிலம் பச்மாரியில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி,

"ஹரியானாவில் aவாக்குத் திருட்டு தெளிவாக செய்யப்பட்டுள்ளது. இருபத்தைந்து லட்சம் வாக்குகள் திருடப்பட்டுள்ளன, எட்டு வாக்குகளில் ஒரு வாக்கு திருடப்பட்டுள்ளன. தரவுகளைப் பார்த்த பிறகு, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் மகாராஷ்டிரத்திலும் இதுவே நடந்துள்ளது என்று நான் நம்புகிறேன். இது பா.ஜ.க. மற்றும் தேர்தல் ஆணையத்தின் வேலை. எங்களிடம் இன்னும் அதிகமான ஆதாரங்கள் உள்ளன, விரைவில் அதை வெளிப்படுத்துவேன்.

தற்போதைய முக்கிய பிரச்சினை வாக்குத் திருட்டு, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் அதை மூடி மறைத்து நிறுவனம யமாக்குவதற்கான ஒரு அமைப்பு. எங்களிடம் விரிவான தகவல்கள் உள்ளன. இதுவரை நாங்கள் மிகக் குறைவாகவே வெளிக்காட்டினோம், ஆனால் முக்கிய பிரச்சினை என்ன வென்றால், ஜனநாயகம் மற்றும் அம்பேத்கரின் அரசமைப்பின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பிரத மர் மோடி, அமித் ஷா மற்றும் தலை மைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் ஆகியோர் நேரடியாக கூட்டு சேர்ந்து இதைச் செய்கிறார்கள். இது நாட்டை, பாரத மாதாவை சேதப்படுத்துகிறது." என்று குற்றம் சாட்டினார்.






# உலகின் பாதுகாப்பான சுற்றுலா இடங்கள்: சுவிட்சர்லாந்து முக்கிய இடத்தை பெற்றது

2026 ஆம் ஆண்டில், உலகின் பாதுகாப்பான பயண இடங்களின் பட்டியலில் சுவிட்சர்லாந்து முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

மிகச்சிறந்த 10 நாடுகளின் பட்டியலில் கனடா, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, ஐஸ்லாந்து, ஆஸ்திரியா, நியூசிலாந்து, ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான் மற்றும் அயர்லாந்து ஆகிய 9 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நாடுகளுடன் இணைந்து, சுவிட்சர்லாந்து பயணிகளுக்கு பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் சாகச அனுபவங்களை சமநிலையாக வழங்கும் சிறந்த இடமாக திகழ்கிறது.

சுவிட்சர்லாந்தின் அரசியல் நடுநிலை, திறமையான சட்ட அமுலாக்கம் மற்றும் அழகிய இயற்கை சூழல், பயணிகளுக்கு மனநிம்மதியான அனுபவத்தை வழங்குகிறது.

ஆல்ப்ஸ் மலைகளில் நடைபயணம், பாரம்பரிய கிராமங்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகள் ஆகியவை, பாதுகாப்பான சூழலில் அனுபவிக்க முடியும்.

இந்த பட்டியலில் உள்ள நாடுகள் அனைத்தும் குறைந்த குற்றச்செயல்கள், நம்பகமான சுகாதார வசதிகள் மற்றும் நட்பு மனப்பான்மையுடன் பயணிகளுக்கு உகந்த இடங்களாக உள்ளன.

நெதர்லாந்து தனது சைக்கிள் பாதைகள் மற்றும் இனம் கலந்த சமூகத்தால் பிரபலமானது. ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து சாகச பயணிகளுக்கு பாதுகாப்புடன் இயற்கை அனுபவங்களை வழங்குகின்றன.

ஐஸ்லாந்து மற்றும் ஆஸ்திரியா அமைதியான சுற்றுச்சூழலுடன் கலாச்சார செழுமையை கொண்டுள்ளன. ஜப்பான் தனது ஒழுங்குமுறை மற்றும் மரியாதை கலாச்சாரத்தால் பயணிகளுக்கு பாதுகாப்பான இடமாக உள்ளது.

ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அயர்லாந்து, பாதுகாப்புடன் சொகுசு மற்றும் மகிழ்ச்சியை தரும் இடங்களாக திகழ்கின்றன. இந்த 10 நாடுகள், 2026 இல் பயணிக்க விரும்பும் அனைவருக்கும் பாதுகாப்பும், அனுபவமும் நிறைந்த பயணத்தை உறுதி செய்கின்றன.

# அமெரிக்காவிற்கான உலோகங்கள் மீதான ஏற்றுமதி தடையை நீக்கிய சீனா அரசாங்கம்

அமெரிக்காவிற்கான முக்கிய உலோகங்கள் மீதான ஏற்றுமதி தடையை சீனா தற்காலிகமாக நீக்கியுள்ளது.

சீனாவின் வர்த்தக அமைச்சகம், 2024 இல் அறிவித்திருந்த முக்கிய உலோகங்களான கலியம், ஜெர்மேனியம், அன்டிமனி மற்றும் சூப்பர்-ஹார்ட் பொருள்களின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி தடையை 2025 நவம்பர் 9 முதல் 2026 நவம்பர் 27 வரை தற்காலிகமாக நீக்கியுள்ளது.

இந்த நடவடிக்கை, 2026 ஆம் ஆண்டை முன்னிட்டு சீனா-அமெரிக்கா இடையேயான வர்த்தக பதற்றங்களை குறைக்கும் நோக்கில் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இரட்டை பயன்பாட்டுக்குரிய கிராஃபைட் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட கடுமையான சரிபார்ப்பு நடைமுறைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இதனுடன், ஒக்டோபர் 9 இல் அறிவிக்கப்பட்ட சில அரிய பூமி உலோகங்கள் மற்றும் லித்தியம் பேட்டரி பொருள்கள் மீதான கட்டுப்பாடுகளும் சீன அரசு தற்காலிகமாக நீக்கியுள்ளது.



சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையேயான சமீபத்திய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இரு தலைவர்களும் வரி கட்டுப்பாடுகளை குறைத்து, மற்ற வர்த்தக நடவடிக்கைகளை ஒரு வருடத்திற்கு இடைநிறுத்த ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைகள், உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் உற்பத்தி துறைகளில் நிலவும் உலோக தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், சர்வதேச வர்த்தக நிலைமையை சீராக்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது.a7

கனடா முரசு
திங்கட்கிழமை | 10/101/2025

## கனடாவில் காய்ச்சல் பரவல் அதிகரிக்கும் அபாயம் நிலை

கனடாவில் இந்த ஆண்டில் காய்ச்சல் பரவுகை அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல் நோயாளிகள் அதிகரித்து வரும் நிலையில், மருத்துவ நிபுணர்கள் 03







# மொன்ரியல் நகரின் பெல் மையம் முன்பாக ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் போராட்டம்

மொன்ரியல் நகரில் உள்ள பெல் மையம் முன்பாக ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் ஒன்று திரண்டனர்.

அவர்கள், மாகாணத்தில் உள்ள மருத்துவர்களின் சம்பள முறையில் மாற்றம் ஏற்படுத்தும் புதிய சட்டத்தை இடைநிறுத்துமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்

4 மருத்துவ சம்மேளனங்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த போராட்டம், கடந்த மாதம் மாகாண சபையில் முதல்வர் பிரான்சுவா லெகோ வலுக்கட்டாயமாக நிறைவேற்றிய சட்டமூலத்தை எதிர்ப்பதாக அமைகிறது. 02






# தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை குறைக்கும் கனடா

அடுத்த சில ஆண்டுகளில் கனடாவிற்குள் அனுமதிக்கும் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை அந்நாட்டு மத்திய அரசாங்கம் கணிசமாகக் குறைத்து வருகிறது.

அடுத்த ஆண்டு 385,000 தற்காலிக குடியிருப்பாளர்களை மாத்திரம் நாட்டுக்குள் அனுமதிக்க கனடா தீர்மானித்துள்ளது.

குடியேற்றத்தை இன்னும் நிலையான நிலைகளுக்கு கொண்டு வருவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது என அந்நாட்டு நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சர்வதேச மாணவர் வருகையில் 60 சதவீதம் குறைவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

2024 உடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு புகலிடக் கோரிக்கைகளும் மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்பட்டுள்ளன.




இதனிடையே அடுத்த மூன்று ஆண்டுகளில் 380,000 புலம்பெயர்ந்தோருக்கு நிரந்தர வதிவிடத்தை வழங்க அந்நாட்டு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.






# உயரத்தால் உலக சாதனை படைத்த கனேடிய இளைஞர் ஒலிவியர் ரியூ

அமெரிக்காவின் ஃப்ளோரிடா பல் கலைக்கழக கூடைப்பந்தாட்ட அணி யில் இணைந்துள்ள கனேடிய இளை ஞர் ஒலிவியர் ரியூ உலகின் மிக உயரமான கூடைப்பந்தாட்ட வீரராக சாதனை படைத்துள்ளார்.

7 அடி 9 அங்குல உயரமுடைய இவர், ரியூ, கியூபெக்கின் டெர்போன் நகரைச் சேர்ந்தவர்.19 வயதான இவர், ஏற்கனவே கின் னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் உலகின் உயரமான இளை ஞர் என்ற பெருமை பெற்றவர்.








## மொன்றியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த சட்டமூலம், மருத்துவர்களின் சம்பளத்தின் ஒரு பகுதியை செயல் திறன் இலக்குகள் என்பதுடன் இணைக் கிறது.

மேலும், அந்த மாற்றங்களை புறக் கணிக்கவோ அல்லது எதிர்ப்புக் காட்டவோ முயற்சிக்கும் மருத்துவர்க ளுக்கு கடுமையான அபராதங்கள் விதிக்கப்படும் என எச்சரிக்கிறது.

மருத்துவர்கள், இந்த புதிய சட்டம் தங்களது குரலை அடக்குவதாகவும், அதன் விளைவாக குவெபெக் மாகா ணத்திலிருந்து பல மருத்துவர்கள் வெளியேற நேரிடும் அபாயம் உள்ள தாகவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து, பல மருத்துவ அமைப்புகள் அந்தச் சட்டத்தை நீதிமன் றத்தில் சவாலுக்குட்படுத்த தீர்மானித் துள்ளன.

இந்த போராட்டம், மதியம் 2 மணிக்கு மொன்றியல் நகர மையத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.






# அமெரிக்கா சென்ற கனேடிய யுவதியை திருப்பி அனுப்பினர் சுங்க அதிகாரிகள்

அமெரிக்காவுக்குச் செல்லவிருந்த 20 வயதுடைய கனேடிய யுவதி ஒருவருக்கு, அமெரிக்க சுங்க அதிகாரிகள் நாட்டிற்குள் நுழைய அனுமதி மறுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

தாம் “சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேற முயற்சிப்பதாக” சுங்க அதிகாரிகள் சந்தேகித்தனர் என கனேடிய யுவதி குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி யுவதி செல்லுபடியாகும் கனேடிய கடவுச்சீட்டு மற்றும் ஆறு வாரங்களுக்கான சுற்றுப் பயணச் சீட்டுடன் ஆர்லாண்டோவுக்குப் பயணிக்கத் தயாராக இருந்துள்ளார்.

இருப்பினும் விமான நிலையத்தில் அமெரிக்க முன்-அனுமதி பிரிவில் ஓர் அதிகாரி அந்த யுவதியிடம் கேள்வி கேட்டபோது, சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, கனேடிய யுவதி அமெரிக்காவிற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அமெரிக்க குடியேற்ற சட்ட நிபுணர்கள் சமீபகாலமாக கனேடியர்கள் மீது கடுமையான சோதனைகளை நடத்தி வருகின்றனர் எனவும் அரசியல் சூழ்நிலைகள் இதற்கு காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக அமெரிக்காவுக்குச் செல்பவர்கள் எதிர்பாராத சோதனைகளுக்குத் தயாராக இருக்க வேண்டும் என்றும் திருமண அழைப்பிதழ்கள் அல்லது நிகழ்வுக்கான டிக்கெட்டுகள், திரும்புவதற்கான விமானச் சீட்டு போன்ற அனைத்து ஆவணங்களையும் கையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டு கடுமையான இன்ஃப்ளுவன்சா தொற்றுக்காலத்துக்கு தயாராக இருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த வாரம் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் சுமார் 2 வீதம் பேருக்கு இன்ஃப்ளுவன்சா தொற்று உறுதியானது என கனேடிய பொதுச் சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது 5 சதவீதம் என்ற தொற்று பரவல் அளவை விட குறைவாக இருந்தாலும், சில வாரங்களுக்கு முன்பு இருந்ததை ஒப்பிடும்போது அதிகரித்துள்ளது.

தென் அரைகோளத்தில் கடந்த 2 ஆண்டுகளாக சாதாரணத்தை விட அதிகமான காய்ச்சல் தொற்றுகள் பதிவாகியுள்ளன.அவுஸ்திரேலியாவில் மட்டும் 4.1 லட்சம் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஜப்பான், பிரித்தானியா போன்ற நாடுகளில் விரைவாக பரவல் தொடங்கியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

